# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 40

# இஸ்ரயேலைக் குறித்த தீர்க்கதரிசனம்




## Israel on Prophecy

Bible Research and Study Centre

# தேவனுடைய தெய்வீகத்திட்டம்

## இஸ்ரயேலைக் குறித்த தீர்க்கதரிசனம்



கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள அன்பு சகோதர சகோதரிகளே,

பிதாவாகிய தேவனாலும், நமது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் கிருபையும் , சமாதானமும், இரக்கமும் உண்டாவதாக. இன்றைக்கு நாம் பார்க்கப்போகிற பாடம் இஸ்ரயேல் தேசத்தைக் குறித்து தேவன் சொல்லியுள்ள தீர்க்கதரிசனங்கள் ஆகும்.

**ஏன் இஸ்ரயேலைக் குறித்த தீர்க்கதரிசனங்களை நாம் பார்க்கவேண்டும்?**

இஸ்ரயேல் தேசமானது நமக்கு சம்பந்தமில்லாத, பூமியில் ஏதோ ஒரு பகுதியில் உள்ள ஒரு சிறிய தேசமாகும். அப்படியிருக்க, இந்த இஸ்ரயேலைக் குறித்து நாம் ஏன் தெரிந்து கொள்ளவேண்டும்? அதைக் குறித்த தீர்க்கதரிசனங்களை பார்ப்பதினால் நமக்கு என்ன பிரயோஜனம்? என்ற கேள்வி நமக்கு வரலாம்.



பிரியமானவர்களே, இஸ்ரயேலில் நடக்கும் சம்பவங்களுக்கு நமக்கும் என்ன தொடர்பு என்று பார்க்கும்போது, தேவன் இந் உலகத்தில் இஸ்ரயேல் தேசத்தை ஒரு நாள் காட்டியாக (கடிகார வைத்திருக்கிறார். எப்படியெனில், இஸ்ரயேல் தேசத்தில் நடக்கு சம்பவங்களை வைத்தே நாம் சுவிசேஷயுகத்தின் முடிவு, ஆயிரவரு அரசாட்சியின் ஆரம்பம், இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை மற்றும் நாம் எந்தக் காலத்தில் இப்போது இருக்கிறோ என்பவைகளையெல்லாம் அறிந்துகொள்ளமுடிகிறது.

இஸ்ரயேலரின் சரித்திரத்தில் நடைபெறும் சம்பவங்கள் யாவும் ஏதோ ஏதேச்சையாக நடப்பவையல்ல. எல்லாமே தேவனால் வெகு நேர்த்தியாக ஏற்கனவே திட்டமிடப்பட்டவை ஆகும். எனவே இஸ்ரயேலரை, இஸ்ரயேல் தேசத்தைக் குறித்த காரியங்களை நாம் அறிந்துகொள்வது மிகவும் அவசியமானது.

இயேசுகிறிஸ்துவும்கூட தம்முடைய இரண்டாம் வருகையைக் குறித்து குறிப்பிடும்போது, இஸ்ரயேலரையே அடையாளமாக சுட்டிக் காண்பித்துச் சென்றுள்ளார் -



**லூக்கா21:29-31**

'அத்திமரத்தையும் மற்றெல்லா மரங்களையும் பாருங்கள். அவைகள் துளிர்க்கிறதை நீங்கள் காணும்போது வசந்தகாலம் சமீபமாயிற்றென்று அறிகிறீர்கள். அப்படியே இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்போது,தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்றென்று அறியுங்கள்"

**அத்திமரம்** - இஸ்ரயேலரைக் குறிக்கிறது

**துளிர்க்கிறது** - இஸ்ரயேலர் ஆசீர்வதிக்கப்படுவதைக் குறிக்கிறது

இஸ்ரயேலர் ஆசீர்வதிக்கப்படுவதற்கும், தேவனுடைய ராஜ்யத்திற்கும் சம்பந்தம் உண்டு என்று பார்க்கிறோம். எனவே இன்றைய நாளில் இஸ்ரயேலைக்குறித்து தேவன் சொன்ன தீர்க்கதரிசனங்களைப் பார்ப்பது அவசியமும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருக்கிறது.

இன்றைய பாடத்திற்கு ஆதாரமாக நாம் தெரிந்துகொண்ட வேதப்பகுதி

**எசேக்கியேல் 37:1-10**

' கர்த்தருடைய கை என்மேல் அமர்ந்து, கர்த்தர் என்னை ஆவிக்குள்ளாக்கி வெளியே கொண்டுபோய், எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கின் நடுவில் நிறுத்தி, என்னை அவைகளின் அருகே சுற்றி நடக்கப்பண்ணினார். இதோ, பள்ளத்தாக்கின் வெட்டவெளியிலே அந்த எலும்புகள் மகா திரளாய்க் கிடந்தது. அவைகள் மிகவும் உலர்ந்ததுமாயிருந்தது. அவர் என்னை நோக்கி : மனுபுத்திரனே, இந்த எலும்புகள் உயிரடையுமா என்றுகேட்டார். அதற்கு நான், கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் அதை அறிவீர் என்றேன். அப்பொழுது அவர்: நீ இந்த எலும்புகளைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்து அவைகளைப் பார்த்துச் சொல்லவேண்டியது என்னவென்றால், உலர்ந்த எலும்புகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள். கர்த்தராகிய ஆண்டவர் இந்த எலும்புகளை நோக்கி : இதோ, நான் உங்களுக்குள் ஆவியைப் பிரவேசிக்கப் பண்ணுவேன், அப்பொழுது உயிரடைவீர்கள். நான் உங்கள்மேல் நரம்புகளைச் சேர்த்து, உங்கள்மேல் மாம்சத்தை உண்டாக்கி, உங்களைத் தோலினால்மூடி, உங்களில் ஆவியைக் கட்டளையிடுவேன். அப்பொழுது நீங்கள் உயிரடைந்து, நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்களென்று உரைக்கிறார் என்று சொல் என்றார்.

எனக்குக் கட்டளையிட்டபடியே நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன். நான் தீர்க்கதரிசனம் உரைக்கையில் ஒரு இரைச்சல் உண்டாயிற்று. இதோ அசைவுண்டாகி, ஒவ்வொரு எலும்பும் தன் தன் எலும்போடே சேர்ந்துகொண்டது. நான் பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ அவைகள்மேல் நரம்புகளும் மாம்சமும் உண்டாயிற்று. மேற்புறமெங்கும் தோலினால் மூடப்பட்டது. ஆனாலும் அவைகளில் ஆவி இல்லாதிருந்தது. அப்பொழுது அவர் என்னைப் பார்த்து : நீ ஆவியை நோக்கித் தீர்க்கதரிசனம் உரை, மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் உரைத்து, ஆவியை நோக்கி :

கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், ஆவியே, நீ காற்றுத் திசை நான்கிலுமிருந்து வந்து, கொலையுண்ட இவர்கள் உயிரடையும்படிக்கு இவர்கள்மேல் ஊது என்கிறார் என்று சொல் என்றார். எனக்குக் கற்பிக்கப்பட்டபடி நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன். அப்பொழுது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க,அவர்கள் உயிரடைந்து, காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள்"

இந்த வேதப் பகுதியானது எசேக்கியேல் தீர்க்கதரிசிக்கு தேவன் இஸ்ரயேலரைக் குறித்து காண்பித்த தரிசனமாகும். ஆபிரகாமின் பிள்ளைகளாகிய இஸ்ரயேலருக்கு தேவன் வைத்திருக்கும் தெய்வீகத் திட்டங்களை, ஆசீர்வாதங்களை குறித்து இதன் மூலம் பார்க்கலாம். இந்த தீர்க்கதரிசனத்தில் இஸ்ரயேலரின் கடந்தகால, தற்கால, வருங்கால நிலைமைகளை குறித்து தெளிவாக சொல்லப்பட்டுள்ளன. இதைக்குறித்து இப்போது பார்க்கலாம்.

**தீர்க்கதரிசனத்தின் காலம ¨ :**

இந்த தரிசனத்தை எசேக்கியேலுக்கு தேவன் காண்பித்த காலத்தைக் குறித்து பார்க்கும்போது, இது இஸ்ரயேல் மக்கள் 'பாபிலோன்" தேசத்திற்கு சிறைப்பட்டுப்போன காலத்தில் (கிமு 606 - 536=70 வருடங்கள்). இந்த தரிசனத்தை எசேக்கியேலுக்கு காண்பித்ததாக பார்க்கிறோம்.

**தரிசனம் - விளக்கம் :**

இப்போது நாம் எசேக்கியேலுக்கு காண்பிக்கப்பட்ட தரிசனத்தைக் குறித்து பார்க்கலாம்.

**எசேக்கியேல் 37:1**

'கர்த்தருடையகை என்மேல் அமர்ந்து..
எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கின் நடுவில் நிறுத்தி

இந்த வசனத்தில் எலும்புகள் குறித்து பார்க்கிறோம். இது ஒரு தரிசனம். எனவே நேரடியான அர்த்தம் எடுக்கக்கூடாது.

அப்படியானால் எலும்புகள் எதைக் குறிக்கிறது என்று பார்க்கும்போது,

**எசேக்கியேல் 37:11**

'மனுபுத்திரனே இந்த எலும்புகள் இஸ்ரயேல் வம்சத்தார் அனைவருமே"

என்று பார்க்கிறோம். அடுத்த வசனத்தை பார்ப்போம்-

**எசேக்கியேல் 37:2**

'இதோ பள்ளத்தாக்கின் வெட்டவெளியில் அந்த எலும்புகள் மகா திரளாய்க் கிடந்தது. அவைகள் மிகவும் உலர்ந்ததுமாயிருந்தது"

இங்கு இந்த எலும்புகள் உலர்ந்துபோய் இருப்பதை பார்க்கிறோம். உலர்ந்த எலும்புகள் எதைக் குறிக்கிறது?

**எசேக்கியேல் 37:11**

'இதோ எங்கள் எலும்புகள் உலர்ந்து போயிற்று.



எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று. நாங்கள் அறுப்புண்டு போகிறோம் என்கிறார்கள்” இஸ்ரயேலரின் நம்பிக்கையற்ற தன்மையைக் குறிக்கிறது.

இஸ்ரயேலர் சிதேக்கியா ராஜாவிற்குப் பிறகு பாபிலோன் தேசத்திற்கு சிறைபிடித்து செல்லப்பட்டு அங்கு அடிமைகளாய், கைதிகளாய் மிகவும் கஷ்டப்பட்டனர் என்று பார்க்கிறோம்.

**சங்கீதம் 137:1**

‘பாபிலோன் ஆறுகள் அருகே நாங்கள் உட்கார்ந்து அங்கே சீயோனை நினைத்து அழுதோம்”



சுமார் 70 வருடங்கள் இஸ்ரயேலர் பாபிலோன் தேசத்தில் அடிமைகளாய்இருந்ததைப் பார்க்கிறோம்.

அப்படியானால் நாம் மேல் பார்த்த வசனமான,’உலர்ந்த தன்மையாகிய நம்பிக்கையற்ற நிலை”இந்த 70 வருட அடிமைத்தன வாழ்க்கையின் காலத்தைக் குறிக்கிறதா? என்று பார்க்கும்போது, குறுகிய காலத்திலேயே இஸ்ரயேலர் மறுபடியுமாக தங்கள் தேசத்திற்குத் திரும்பியதைப் பார்க்கிறோம்

**2நாளாகமம் 36:21-23**

‘கர்த்தர் எரேமியாவின் வாயினாலே சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும் தேசம் தன்னுடைய ஓய்வு வருஷங்களை இரம்மியமாய் அனுபவித்துத் தீருமட்டும் அது பாழாய்க் கிடந்த நாளெல்லாம் அதாவது எழுபது வருஷம் முடியுமட்டும் ஓய்ந்திருந்தது... பெர்சியா ராஜாவாகிய கோரேசின் முதலாம் வருஷத்திலே..அவருடைய ஜனங்களில் எல்லாரிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானோ அவன் போகட்டும்..”

பாழாய்க் கிடந்த தேசம் கோரேஸ் ராஜாவின் காலத்தில் மீண்டும் இஸ்ரயேலருக்கு கிடைத்ததை பார்க்கிறோம். எனவே மேலே எசேக்கியேலுக்கு தேவன் காண்பித்த தரிசனம் இந்த காலத்தை குறிக்கிறதா என்று பார்க்கும்போது, இதைக் குறிக்கவில்லை என்பதை நாம் பார்க்கமுடிகிறது.

ஏனென்றால் மறுபடியுமாக இஸ்ரயேலர் கி.பி 70ல் ரோம சக்கரவர்த்தி தீத்துராயன் காலத்தில் முற்றிலும் சிதறடிக்கப்பட்டு இஸ்ரயேல் தேசம் முற்றிலுமாக அழிக்கப்பட்டதை நாம் பார்க்கிறோம். இஸ்ரயேலர் உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டனர். இதைக் குறித்து வேதத்தில் பார்க்கும்போது,



**தானியேல் 9:26**

‘.. நகரத்தையும் பரிசுத்தஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள்

அழித்துப்போடுவார்கள்”

இந்த வசனம் கிபி 70ல் நிறைவேறியதை நாம் பார்க்கிறோம். பிரபுவின் ஜனங்களாகிய- ரோம ராஜாக்கள் மூலம் இஸ்ரயேல் தேசமும், எருசலேம் தேவாலயம் முற்றிலும் அழிக்கப்பட்டது.

### அப்படியானால் முன்பு பாபிலோனுக்கு இஸ்ரயேலர் சிறைப்பட்டுப்போனது எதைக் குறிக்கிறது?

கிபி 70ல் இஸ்ரயேலர் உலகம் முழுவதும் சிதறுண்டு போவதற்கு இது நிழலாக இருக்கிறது.

**சகரியா9:12**

‘நம்பிக்கையுடைய சிறைகளே அரணுக்குத் திரும்புங்கள்
இரட்டிப்பான நன்மையைத் தருவேன்..”

**எரேமியா 16:18**

‘முதலாவது நான் அவர்களுடைய அக்கிரமத்துக்கும்
அவர்களுடைய பாவத்திற்கும் இரட்டிப்பாய் நீதியை சரிக்கட்டுவேன்”

இந்த வசனங்களிலிருந்து இஸ்ரயேலருக்கு ஒரு ஆசீர்வாத காலம் அதன்பிறகு அதே அளவிற்கு ஒரு தண்டனையின் காலம் இருப்பதை பார்க்கமுடிகிறது.

**இஸ்ரயேலின் ஆசீர்வாதக் காலம்** : கிமு1812 முதல் கிபி 33 வரை. 1812+ 33 = 1845 வருடங்கள்

**தண்டனையின் காலம்** : கிபி 33முதல் 1845 வருடங்கள் சேர்க்கவேண்டும். 33+ 1845 = 1878

அப்படியானால் கிபி 33 முதல் கிபி 1878 வரை இஸ்ரயேலருக்கு தண்டனையின் காலம் ஆகும். இந்தக் காலமே ‘**உலர்ந்த எலும்பின் காலம்**’. இஸ்ரயேலர் சுமார் 1878 வரை எந்த நம்பிக்கையுமின்றி போன காலத்தை எசேக்கியேலுக்கு தேவன் தரிசனமாக காண்பித்தார்.

இந்த நாட்களில் இஸ்ரயேலர் உலகமெங்கும் பல பகுதிகளுக்கு சிதறடிக்கப்பட்டு நாடோடிகளாய், அகதிகளாய், வீடற்றவர்களாய், குடியுரிமை இல்லாதவர்களாய், தேவன் ஆபிரகாம் மூலமாக இஸ்ரயேலருக்குக் கொடுத்த ஆசீர்வாதங்களைக் குறித்த எந்த நம்பிக்கையும் அற்றுப்போன நிலைமையை குறிக்கிறது.

இஸ்ரயேலர் ஆரம்பத்தில் நாம் பார்த்த பாபிலோனுக்கு சிறைப்பட்டு போனது இந்த காலத்திற்கு நிழலாயிருக்கிறது.

**பாபிலோன் - முழு உலகத்திற்கு அடையாளம்**

அதேபோல் இஸ்ரயேலரை சிறையிருப்பிலிருந்து விடுதலைசெய்த கோரேஸ் ராஜா இயேசுகிறிஸ்துவுக்கு நிழலாயிருக்கிறார்.



**ஏசாயா 45:1** ‘கர்த்தராகிய நான்அபிஷேகம் பண்ணின
கோரேசுக்கு முன்பாக...”

எப்படியெனில் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலேயே சிதறியிருந்த இஸ்ரயேலர் மறுபடியுமாக கூட்டி சேர்க்கப்பட்டதை பார்க்கிறோம்.

**எசேக்கியேல் 37:12**

‘ஆகையால் நீ தீர்க்கதரிசனம் உரைத்து .. நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து,
உங்களை உங்கள் பிரேதக் குழிகளிலிருந்து வெளிப்படவும்,
உங்களை இஸ்ரயேல் தேசத்திற்கு வரவும் பண்ணுவேன்”

இந்த வசனத்தில் பிரேதக் குழிகளைத் திறந்து, பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படப் பண்ணுவது எதைக் குறிக்கிறதென்றால்
இஸ்ரயேல் மக்கள் உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டு எந்த நம்பிக்கையும், எந்த எதிர்பார்ப்பும் இல்லாத செத்த நிலைமையைக் குறிக்கிறது.

இப்படியிருந்த சூழ்நிலையில்தான் தேவன் சொல்கிறார்
‘உங்களை இஸ்ரயேல் தேசத்திற்கு வரப்பண்ணுவேன்”

## இஸ்ரயேலர் தங்கள்தேசத்திற்கு திரும்பி வருதல்

**எசேக்கியேல் 37:7**

‘.. நான் தீர்க்கதரிசனம் உரைக்கையில் ஒரு இரைச்சல் உண்டாயிற்று. இதோ
அசைவுண்டாகி, ஒவ்வொரு எலும்பும் தன் தன் எலும்போடே சேர்ந்துகொண்டது”

இந்த வசனம் இஸ்ரயேலர் எவ்வாறு தங்கள் தேசத்திற்கு திரும்பி வருகின்றனர்என்பதை மிக அழகாக குறிப்பிடுகிறது. அதைக் குறித்து இப்போது பார்க்கலாம்

### இரைச்சல் (Noise)

**இரைச்சல் (சத்தம்) எதைக் குறிக்கிறது?**

எசேக்கியேல் தீர்க்கதரிசனம் உரைக்கும்போது ஒரு இரைச்சல் உண்டாயிற்று என்று பார்க்கிறோம். இது எதைக் குறிக்கிறது என்று பார்க்கும்போது,

**வெளிப்படுத்தல் 11:15**

‘ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான். அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள்
நம்முடைய கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின.
அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும்
கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின”

இந்த சத்தம்(இரைச்சல்) எதைக் குறிக்கிறதென்றால் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அதாவது ஆயிரவருட அரசாட்சியில் இஸ்ரயேலர் விடுதலைக்கான முயற்சி நடைபெறுவதை இந்த இரைச்சல் குறிக்கிறது.

**எசேக்கியேல் 21:26,27**

“பாகையைக் கழற்று, கிரீடத்தை எடுத்துப்போடு. அது இனி முன்போலிராது...
உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்.
அவருக்கே அதைக் கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்”

**உரிமைக்காரனானவர் : கர்த்தராகிய இயேசுகிறிஸ்து**

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப் பிறகே இஸ்ரயேலருக்கு தேசம் கிடைப்பதை இவ்வசனம் குறிப்பிடுகிறது. மேலும் வேதம் இச்சத்தத்தை (இரைச்சல்) குறிப்பிடும்போது,

1தெசலோனிக்கேயர்4:16,17

“ஏனெனில் கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்குவார்”

எனவே இதிலிருந்து இந்த சத்தம் இயேசுவின் இரண்டாம் வருகையை குறிப்பதை உறுதிப்படுத்துகிறது.நாம் மறுபடியுமாக எசேக்கியேல் பார்த்த தரிசனத்திற்கு வருவோம்

எசேக்கியேல் 37:7 ‘ ஒரு இரைச்சல் உண்டாயிற்று, இதோ அசைவுண்டாகி..”

இரைச்சலுக்கு அடுத்து அங்கு “அசைவுண்டாகிறதை” பார்க்கிறோம். இந்த ‘அசைவு” எதைக் குறிக்கிறதென்று இப்போது பார்க்கலாம்.

**அசைவு (Shaking)**

இதன் எபிரேய வார்த்தை ‘raash’(Strongs Hebrew #7494). இதன் அர்த்தம் ‘to remove” அதாவது அப்புறப்படுத்து என்பதாகும். இது எதைக் குறிக்கிறதென்றால், பல தேசங்களில் சிதறடிக்கப்பட்டிருந்த இஸ்ரயேலர் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு மீண்டுமாக இஸ்ரயேல் தேசத்திற்கு கூட்டி சேர்க்கப்பட்டதை குறிக்கிறது.

இஸ்ரயேலர் தங்களுடைய தேசத்திற்கு(சிதறுண்ட இடங்களிலிருந்து) கூட்டி சேர்க்கப்பட்ட விதத்தைக் குறித்து வேதம் கூறும்போது,

எரேமியா 16:15,16

“இஸ்ரயேல் புத்திரரை வடதேசத்திலும், தாம் அவர்களை துரத்திவிட்ட எல்லா தேசங்களிலிருந்தும் வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சத்தியம் பண்ணுவார்கள்.நான் அவர்கள் பிதாக்களுக்கு கொடுத்த அவர்களுடைய தேசத்துக்கு அவர்களைத் திரும்பி வரப்பண்ணுவேன். இதோ நான் மீன்பிடிக்கிற அநேகரை அழைத்தனுப்புவேன். இவர்கள் அவர்களைப் பிடிப்பார்கள். அதற்குப் பின்பு வேட்டைக்காரராகிய அநேகரை அழைத்தனுப்புவேன். இவர்கள் அவர்களை எல்ல மலைகளிலும், எல்லாக் குன்றுகளிலும், கன்மலைகளின் வெடிப்புகளிலும் வேட்டையாடுவார்கள்”

இஸ்ரயேலரை தங்கள் சுயதேசத்துக்கு திரும்பிவரப்பண்ண, தேவன் இரண்டு காரியங்கள் செய்ததைப் பார்க்கிறோம் -

1.மீன்பிடிக்கிறவர்கள் 2. வேட்டைக்காரர்

இந்த இரண்டு முறைகளில் இஸ்ரயேலர் இஸ்ரயேல் தேசம் கொண்டு வரப்பட்டனர்.

**மீன்பிடிக்கிறவர்கள (Fishermen)**

முதலாவது இந்த முறையில் இஸ்ரயேலர் தங்கள் தேசத்திற்கு கொண்டுவரப்பட்டனர்.



ஏனென்றால் உலகின் பல பகுதிகளுக்கு சிதறிப்போன இஸ்ரயேலர் தாங்கள் சென்ற இடங்களில் மிகவும் மேன்மையான முறையில் முன்னேறினர். சிலர் நல்ல உயர் பதவிகளிலும், நல்ல வசதியான சூழ்நிலைகளிலும் இருந்தனர். எனவே தாங்கள் இருக்கின்ற இடத்தைவிட்டு, முற்றிலும் அழிந்துபோன இஸ்ரயேல் தேசத்திற்கு வருவதற்கு ஆர்வமில்லாமல் , மனமற்று இருந்தனர்.

கிபி 1878 ல் இஸ்ரயேலருக்காக 'பெட்டாடிக்குவா மூவ்மெண்ட் (PETTA TIKVAH MOVEMENT)" என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமைப்பை ஆரம்பித்தவர் பெயர் **'தியோடர் ஹெர்ஸெல்**(Theodore Herzl)'".இவர் கிபி 1860ல் ஹங்கேரியில் பிறந்த யூதர் ஆவார். இவர் எழுதிய "சீயோன் இயக்கம்" என்ற புத்தகம் இஸ்ரயேலரை சற்று விழிப்படைய வைத்தது. இவர் எழுதிய புத்தகத்தில் இஸ்ரயேல் தேசம் தோன்றவேண்டிய அவசியம் பற்றியும், இஸ்ரயேலருக்கு சுயதேசம் இல்லாவிட்டால் நேரிடக்கூடிய ஆபத்துக்கள்பற்றியும் தெளிவாக குறிப்பிட்டிருந்தார். ஆனால் சிதறியிருந்த யூதர்கள் வசதியான நிலைகளில் தாங்கள் போன தேசங்களில் இருந்ததால் வர விருப்பப்படவில்லை.



எனவே தியோடர் ஹெர்ஸெல் அவர்கள் "மீன்பிடிப்பதைப்போல" இஸ்ரயேல் தேசத்திற்கு வருபவர்களுக்கு அவர்களுக்குவேண்டிய வசதிகள்(வீடு, வேலை, குடும்பத்திற்குவேண்டிய சௌகரியம்)செய்துகொடுப்பதாக கூறினார். மட்டுமல்ல இஸ்ரயேலருக்கு தேவன் வைத்துள்ளஆசீர்வாதங்களையும்(ஏசாயா60:23)கூறி அவர்களை உற்சாகப்படுத்தினார். அப்போதும் சிறிதளவே இஸ்ரயேலர் தங்கள் சுயதேசம் சென்றனர்.

எனவே தேவனுடைய அடுத்த திட்டம் செயல்படுத்தப்பட்டது.

### வேட்டைக்காரர்கள ் (Hunters)

இரண்டாம் உலகப்போருக்கு பின்பு "ஆண்டி ஜியானிஸ்டிக் இயக்கம்"(Anti-Zionist movement) இஸ்ரயேலருக்கு விரோதமாக ஆரம்பிக்கப்பட்டது. ஆங்காங்கே சிதறியிருந்த இஸ்ரயேலர்பல வகைகளில் துன்புறுத்தப்பட்டனர். ஜெர்மனியில்'ஹிட்லர் என்பவரால் 60 இலட்சம் யூதர்கள் கொன்றுகுவிக்கப்பட்டனர்.



இப்போது இஸ்ரயேலர் தங்கள் சுயதேசம் செல்லவேண்டும் என்பதையும், தங்களுக்கென்று ஒரு தேசம் தேவை என்பதையும் உணர்ந்தனர். இரண்டாம் உலகப்போருக்கு பின்பதாக 3 வருடங்கள் கழித்து 1948 மே 14ம்தேதி இஸ்ரயேல் தனி நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது.

1845வருடங்கள் பூலோக வரைபடத்தில் இல்லாமல்போன இஸ்ரயேல்தேசம் மறுபடியுமாக அதேஇடத்தில் எழும்பினது, தேவனுடைய செயலேயல்லாமல் வேறு ஒன்றுமில்லை.

1878முதல் 1948வரை பேச்சு வார்த்தை நடந்து பல

எதிர்ப்புகளுக்கு இடையில் அற்புதவிதமாக இஸ்ரயேலருக்கு “தனிதேசம்” கிடைத்தது. கர்த்தருக்கு சித்தமானால் வருங்காலங்களில் இதைக்குறித்து மேலும் பார்க்கலாம்.

மறுபடியுமாக எசேக்கியேல் பார்த்த தீர்க்கதரிசனத்திற்கு நாம் செல்லலாம் -

எசேக்கியேல் 37:8

“நான் பார்த்துக்கொண்டிருக்கையில்,இதோ,அவைகள்மேல் நரம்புகளும் மாம்சமும் உண்டாயிற்று. மேற்புறமெங்கும் தோலினால் மூடப்பட்டது. ஆனாலும் அவைகளில் ஆவி இல்லாதிருந்தது”

பார்த்துக்கொண்டிருக்கையில் ..- சிறிது காலம் சென்றபின்பு..

## நரம்புகள்

நரம்புகள் எதைக்குறிக்கிறதென்று பார்க்கும்போது, ஒரு உடலின் எல்லா இடங்களுக்கும் இரத்தம் கொண்டு செல்ல நரம்புகள்பயன்படுவதை பார்க்கிறோம். அதாவது ஒரு சரீரத்தின் முக்கிய உறுப்பு நரம்பு. அதுபோல ஒரு தேசம் சிறந்த முறையில் வளர, பணம், பாதுகாப்பு இரண்டும் முக்கிய தேவையாகும். இஸ்ரயேலர் தங்கள் சுயதேசத்திற்கு திரும்பியவுடன் அவர்களுக்கு பணம் மற்றும் தங்கள் தேசத்தைப் பாதுகாக்க இராணுவம் தேவைப்பட்டது.

ஏனென்றால் இஸ்ரயேலர் தங்கள் தேசத்திற்கு வந்த உடனேயே சுற்றிலும் உள்ள நாடுகள் இஸ்ரயேல் மீது யுத்தத்திற்கு வந்துவிட்டனர். பழைய ஏற்பாட்டு யுத்தமுறையைக் குறித்து வேதத்தில் படித்திருந்த இஸ்ரயேலர் அந்த முறையைப் பயன்படுத்தி எதிரிகளை துரத்தினர்(இதைக் குறித்த தெளிவான விபரங்களை வருங்காலங்களில் நாம் பார்க்கலாம்)

இப்படிப்பட்ட சூழ்நிலையில் இஸ்ரயேலருக்கு அதிக பணம் தேவைப்பட்டது. இதற்கு பல நாடுகளில் இருந்த வசதிமிக்க நிலையிலிருந்த யூதர்களிடமிருந்து பணம் வந்து, இஸ்ரயேல் தேசம் அதன் மூலம் கொஞ்ச கொஞ்சமாக பெலப்பட ஆரம்பித்தது. அதே சமயம், தரைப்படை, கடற்படை,









வான்படைஎன பாதுகாப்பு படைகளும் அமைக்கப்பட்டது.

இதுவே நரம்புகள் உருவாகியதை குறிக்கிறது.

அடுத்து நாம் தரிசனத்தில் பார்ப்பது -

சதை(மாம்சம்) உண்டாயிற்று என்று பார்க்கிறோம். இந்த சதை எதைக் குறிக்கிறது என்று பார்க்கலாம்.

**சதை**



இஸ்ரயேல் தேசத்துக்கு வந்து குடியேறியபிறகு இஸ்ரயேலா் அடைந்த வளா்ச்சியைக் குறிக்கிறது. ஒரு அரசியல் அமைப்பு, பல துறைகளுடன் கூடிய தொழில்துறைஅமைப்பு, பாலைவன பூமியில் இஸ்ரயேல் தேசம் இருந்தாலும், அவா்களின் விவசாயமுறை, மருத்துவமுறை, போக்குவரத்து, தொலைத்தொடா்பு முறை இவைகளின் அபரிதமான வளா்ச்சியையும், மேலும் மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், வங்கிகள் என இஸ்ரயேல் கூட்டி சோ்க்கப்படுதலின் இரண்டாம் கட்ட நிலையைக் குறிக்கிறது.






அடுத்ததாக நாம் வசனத்தை கவனிக்கும்போது, மேற்புறமெங்கும் தோலினால் மூடப்பட்டது. இப்போது தோல் எதைக்குறிக்கிறது என்று பாா்க்கலாம்.

**தோல்**



தோலானது ஒரு சரீரத்தின் முழுமையை , நிறைவை கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. இங்கு தோல் எதைக் குறிக்கிறதென்றால் இஸ்ரயேலில் பாலைவனத்தில் உயிரற்ற உலா்ந்த எலும்புபோன்ற எந்த நம்பிக்கையுமற்ற நிலையில் குடியேறிய இஸ்ரயேலா் ஒரு முழுமையாக வளா்ச்சியடைந்த தேசத்தின் நிலையைக் குறிக்கிறது.

இந்த நிலையானது , ஒரு தேசம் அதிகாரப்பூா்வமாக ஒரு தேசமாக உலக ஐக்கிய நாடுகளின் சபை மூலம் அங்கீகரிக்கப்பட்டு, ஐ.நா சபையின் அங்கத்தினராகஇடம்பெற்று, மற்ற தேசங்களோடு ராஜ்யமாக உறவை ஏற்படுத்திக் கொண்டதில் இஸ்ரயேல் அடைந்தது. இதன் மூலம் மற்ற நாடுகளின் தூதரகங்களை இஸ்ரயேலில் ஏற்படுத்தவும், மற்ற நாடுகளில் தங்களது தூதரகத்தை ஏற்படுத்தவும் அழைப்பைப் பெற்றது. ஆம் இஸ்ரயேல் இன்று தோலினால் மூடப்பட்டது என்று நம்மால் கூறமுடியும்.

அடுத்ததாக வசனத்தைப் பாா்க்கும்போது,

"ஆனாலும் அவைகளில் ஆவி இல்லாதிருந்தது"

இன்று இஸ்ரயேல் தேசம்ஒரு முழுமை அடைந்த நிலையில் 60 வருடங்கள்கடந்து வந்தாலும் அவைகளில் ஆவி இல்லாதிருந்தது.

**எசேக்கியேல் 37:9**

"அப்பொழுது அவர் என்னைப்பார்த்து : நீ ஆவியை நோக்கித் தீர்க்கதரிசனம் உரை. மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம்உரைத்து, ஆவியை நோக்கி : கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், ஆவியே, நீ காற்று திசை நான்கிலுமிருந்து வந்து, கொலையுண்ட இவர்கள் உயிரடையும்படிக்கு இவர்கள்மேல் ஊது என்கிறார் என்று சொல் என்றார் "

இந்த வசனத்தில் "கொலையுண்ட இவர்கள் உயிரடையும்படிக்கு" என்று பார்க்கிறோம். இது எதைக் குறிக்கிறதென்றால், கொலையுண்ட என்பது மரித்த நிலைமையை அதாவது உலகத்தாரின் நிலைமையை (மரித்தோர் தங்கள் மரித்தோரை..) மரணம் மற்றும் அறியாமையில் இஸ்ரயேலர் உலக ஜனங்களைப் போல் இருப்பதைக் குறிக்கிறது. எல்லா வகையான உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களை இஸ்ரயேலர் பெற்றிருந்தபோதிலும், அவர்கள் இயேசுகிறிஸ்துவை அறியாமலிருப்பது, தேவனுடைய ஜீவன் அவர்களுக்குள் இல்லாதிருப்பதையே குறிக்கிறது. இதைக் குறித்து பவுல் கூறும்போது -

**எபேசியர் 4:18**

"அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதயக் கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து.."

இப்படியிருக்க, அவர்கள் ஜீவனைப் பெற்றுக்கொள்ள காத்திருக்கும் ஆவி எதைக் குறிக்கிறது என்று பார்க்கும்போது

"தேவனுடைய பரிசுத்தஆவியை" குறிக்கிறது. இன்று இந்த பரிசுத்த ஆவி உண்மை சபைக்கு ஜீவனைப் பெற்றுத் தந்திருப்பதைப்போல் அவர்களுக்கும் ஆகும்.

**ரோமர் 8:10,11**

"மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால், சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும்,ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர்.. உங்கள் சரீரங்களையும் எழுப்புவார்"

இது இன்னும் இஸ்ரயேலருக்கு கிடைக்கவில்லை. பரிசுத்தஆவியை இஸ்ரயேலர் பெற்றபிறகு தேவனுடைய சத்தியங்களை முழுமையாக அறிந்துகொள்வார்கள். எப்படி, எப்போது இஸ்ரயேலர் அறிந்துகொள்வார்கள் என்று பார்க்கும்போது.

**எசேக்கியேல் 37:10**

"எனக்குக் கற்பிக்கப்பட்டதை நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன்.

அப்பொழுது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க,அவர்கள் உயிரடைந்து, காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள்"

"ஆவி" என்று இங்கு கூறப்பட்டுள்ள 'பரிசுத்தஆவி" இஸ்ரயேல் தேசத்திற்கு நான்கு காற்றுகளிடமிருந்து வரும் என்று நாம் காண்கிறோம். இந்த நான்கு காற்றுகள் எதைக் குறிக்கிறது? பின்வரும் வசனத்தில் இது பற்றி கூறப்பட்டிருக்கிறது -

வெளிப்படுத்தல் 7:1

"இவைகளுக்குப்பின்பு, பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று, பூமியின்மேலாவது, சமுத்திரத்தின் மேலாவது, ஒரு மரத்தின்மேலாவது, காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருக்கக்கண்டேன்".

இப்படி நான்கு திசைகளிலுமிருந்து நான்கு காற்றுகள் வீசும்பொழுது என்ன சம்பவிக்கும் என்று கற்பனை செய்வோம்





அவைகள் சேர்ந்து ஒரு சுழற்காற்றை உருவாக்கும். ஒரு சுழற்காற்று தன் பாதையில் உள்ள அனைத்தையும் அழிக்கிறது. ஆம் இங்கு "பூமியின் நான்குகாற்றுகளிடமிருந்து" அல்லது கண்ணுக்குத் தெரிகிற பூமிக்குரிய ஆளுகையின் நான்கு பிரிவுகளாகிய அரசியல், மதம், சமுதாயம், பொருளாதார அமைப்புகளிடமிருந்து ஒரே நேரத்தில் உருவாகும் உபத்திரவத்தை தேவன் இங்கு குறிப்பிடுகிறார். இந்த உபத்திரவம் தற்போதைய சுவிசேஷயுகத்தையும்,இரண்டாம் உலகத்தையும் முடிவுக்குக்கொண்டுவரும் மகா உபத்திரகாலத்திற்கான ஒரு அடையாளமாகும்.

மேலும் இந்த மகா உபத்திரவக் காலம் மற்றும் நான்கு காற்றுகள் மூலம் இஸ்ரயேல் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்.

அப்போது இஸ்ரயேலின் நிலையைக் குறித்து வேதம் சொல்லும்போது,

எரேமியா 30:3,7-9

"இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்கிறார். நான் அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்துக்கு அவர்களை திரும்பிவரப்பண்ணுவேன். அதை அவர்கள் சுதந்தரித்துக் கொள்வார்கள் என்று கர்த்தர் சொல்கிறார்.

ஐயோ அந்த நாள் பெரியது. அதைப் போலொத்த நாளில்லை. அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம். ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாக்கி இரட்சிக்கப்படுவான்"

இன்றைய நாளில் நாம் இஸ்ரயேலர் தேசத்தை பார்க்கும்போது, எல்லாவித வசதிநிலைகளிலும் தன்னிறைவு பெற்ற நாடாக இருந்தும் சுற்றிலும் உள்ள பகைமை நாடுகளினிமித்தம் இஸ்ரயேலில் எப்போதும் பயம், திகில், சமாதானமின்மை இருப்பதைக் காண்கிறோம். உபத்திரவக் காலத்தில் இன்னும் இஸ்ரயேல் மிகவும் உபத்திரவத்தைச் சந்திக்கும். இந்த வசனங்கள் வெகு சீக்கிரத்தில்

நிறைவேறக்கூடிய காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம்.

**எசேக்கியேல் 38:7,9**

"நீ ஆயத்தப்படு... எல்லாரும் சுகத்தோடே குடியிருக்கும் இஸ்ரயேலின் மலைகளுக்கு விரோதமாய் வருவாய். பெருங்காற்றைப் போல எழும்பி வருவாய். நீயும் உன்னுடைய எல்லா இராணுவங்களும் உன்னோடே கூட இருக்கும் திரளான ஜனங்களும் கார்மேகம் போல் தேசத்தை மூடுவீர்கள்"

ஆம். ஐரோப்பா ரஷ்யா மற்றும் பெரும்பான்மையான நாடுகளிலிருந்து இஸ்ரயேல் தேசம் ஒரு மிகப்பெரிய தாக்குதலை சந்திக்கும் என்று வாசிக்கிறோம் -

**சகரியா 14:2**

"எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணச் சகல ஜாதிகளையும் கூட்டுவேன். நகரம் பிடிக்கப்படும்.. நகரத்தாரில் பாதி மனுஷர் சிறைப்பட்டுப் போவார்கள். மீதியான ஜனமோ நகரத்தைவிட்டு அறுப்புண்டு போவதில்லை"

அதுசமயம் தேவன் இஸ்ரயேலை அற்புதமாக விடுவிப்பதை வேத வசனங்களில் காண்கிறோம்

**சகரியா 12:8,9**

"அந்நாளிலே கர்த்தர் எருசலேமின் குடிகளை காப்பாற்றுவார்... அந்நாளிலே எருசலேமுக்கு விரோதமாய் வருகிற எல்லா ஜாதிகளையும் அழிக்கப்பார்ப்பேன்"

ஆம். தேவன் இஸ்ரயேலுக்காகவும், அவர்களுடைய வெற்றிக்காகவும் யுத்தம் பண்ணுவார். அதனால் ஒரு மாபெரும் வெற்றி நிச்சயம். அந்த கடைசி யுத்தத்தைக் குறித்து வேத வசனங்கள் வெளிப்படுத்துவதைக் காண்போம் -

**சகரியா 14:12**

"எருசலேமுக்கு விரோதமாக யுத்தம் பண்ணின எல்லா ஜனங்களையும் கர்த்தர் வாதிக்கும் வாதையாவது: அவர்கள் காலூன்றி நிற்கையிலும் அவர்களுடைய சதை அழிந்துபோகும்.அவர்கள் கண்கள் தங்கள்குழிகளிலே கெட்டுப்போகும், அவர்கள் நாவு அவர்கள் வாயிலே அழுகிப்போகும்"

இங்கு வாதை என்பது அணு ஆயுத யுத்தத்தை குறிப்பதாக தோன்றுகிறது.

இந்த வாதையை விவரிக்கின்ற வார்த்தைகள் அணு கதிர்வீச்சை பற்றிப் பேசுகிறது.







ஆனால் அது ஒரு குறிப்பிட்ட அளவுக்குள்ளாக கட்டுப்படுத்தப்படும் என்றும், அதினால் இஸ்ரயேல் தேசம் பாதிப்படையாமல் விசேஷமாக பாதுகாக்கப்பட்டு, தேவனுடைய பரிசுத்தஆவியாகிய "ஆவியை" பெற்றுக்கொள்வார்கள் என்பதை பின்வரும் வசனத்தில் வாசிக்கலாம்-

எசேக்கியேல் 39:29

"நான் இஸ்ரயேல் வம்சத்தார் மேல் என் ஆவியை ஊற்றினபடியினால்
என் முகத்தை இனி அவர்களுக்கு மறைக்கமாட்டேன் என்று
கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் என்றார்"

இவ்விதமாக "உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கை பற்றின தீர்ககதரிசனம் நிறைவுக்கு வரும். மேலும் இஸ்ரயேல் தேசம் ஜீவனைப்பெற்று **பெரிய சேனையாக எழுந்து நிற்கும்**". ஆம் யூதர்கள் மூலமாக மாத்திரமே உலகமானது தேவனுடைய வார்த்தையைப் பற்றியும், சத்தியத்தையும் கற்றுக்கொள்ளும் என்று பின்வரும் வசனத்தில் தெளிவாக வாசிக்கிறோம் -

சகரியா 8:23

"அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு
யூதனுடைய வஸ்திரத் தொங்கலைப் பிடித்துக்கொண்டு,
தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம், ஆகையால்
உங்களோடே கூடப்போவோம் என்று சொல்லி அவனைப் பற்றிக்கொள்வார்கள்"

அப்பொழுது **'கர்த்தரின் ராஜ்யம்'"** கண்ணுக்குத் தெரிகின்ற ராஜ்யமாக இருக்கும். முதலாவது இஸ்ரயேலர் தேவனை(கிறிஸ்துவை) அறிந்துகொள்வார்கள். அதன்பிறகு சகல ஜாதிகளும் தெரிந்துகொள்வார்கள் என்பதை ஏசாயா தீர்க்கதரிசி கூறும்போது,

ஏசாயா60:2,3

"இதோ இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்.
ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார். அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்.
உன் வெளிச்சத்தினிடத்திற்கு ஜாதிகளும்,
உதிக்கிற உன் ஒளியினிடத்திற்கு ராஜாக்களும் நடந்துவருவார்கள்"

சத்தியம் எருசலேமிலிருந்து இஸ்ரயேலர் மூலமாக சகல ஜனங்களுக்கும் அறிவிக்கப்படும்.

ஏசாயா 2:3

"சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்"

இப்படியாக இஸ்ரயேலரின் கடந்தகால, நிகழ்கால, எதிர்கால தீர்க்கதரிசனங்களை நாம் பார்க்கிறோம். ஒரு மகிமையான எதிர்காலம் இஸ்ரயேல் தேசத்திற்காக காத்திருக்கிறது

இதிலிருந்து சபை வாய்ப்பின் கடைசி நாட்களில் இருக்கிற நாம், தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய் ஜீவித்து, அந்த பரலோக ராஜ்யத்தை சுதந்தரிக்க

**தேவன் நமக்கு கிருபை செய்வாராக.**

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**

For Further Details Please Contact:

bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky

+919443321874 https://www.facebook.com/bibleresearch/